**நவம்பர் – 09**

# TNPSC துளிகள்

- கோயம்புத்தூரில் விளாங்குறிச்சியில் எல்காட் தகவல் தொழில்நுட்ப வளாகத்தினை தமிழக முதல்வர் திறந்து வைத்துள்ளார்.
- தமிழக அரசின் முன்னாள் உள்துறை செயலாளரும், இரண்டு முறை பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவரும், முதல் மாநிலத் தேர்தல் ஆணையராக இருந்தவருமான K.மலைச் சாமி சமீபத்தில் காலமானார்.
- விண்வெளியில் மரப் பொருட்களின் பெரும் பயன்பாட்டிற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்வதற்காக மரத்தினால் உருவாக்கப்பட்ட உலகத்தின் முதல் செயற்கைக்கோள் ஆன லிக்னோசாட் ஜப்பானிய அறிவியலாளர்களால் விண்ணில் ஏவப்பட்டது.
- கேமன் தீவுகளில் நடைபெற்ற உலகக் குத்துச்சண்டை கூட்டமைப்பின் சூப்பர் ஃபெதர் வெயிட் உலகப் போட்டியில் இந்திய வீரர் மந்தீப் ஜங்ரா வெற்றி பெற்றுள்ளார்.
- ராயல் புருனே ஏர்லைன்ஸ் நிறுவனமானது, 13 ஆண்டுகால இடைவெளிக்குப் பிறகு புருனே-சென்னை-புருனே வழித் தடத்தில் நேரடி விமான சேவையைத் தொடங்கி உள்ளது.
    - இந்தியாவிற்கான விமானச் சேவையின் ஒரே நிறுத்தமாக சென்னை விளங்கும்.
- பயனுக்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்டப் பிரிவினைச் சேர்ந்தவர்கள், மானியக் கடன்கள் மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை இயங்கலையில் அணுகுவதற்கு உதவும் வகையில், ‘PM-SURAKSHA இணைய தளம்’ மற்றும் ‘PM-DAKSH இணைய தளம்’ ஆகியவற்றை மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.
- மத்திய அரசானது, திரிபுரா மற்றும் ஹரியானா ஆகிய மாநிலங்களில் உள்ள கிராமப் புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு 2024-25 ஆம் ஆண்டின் 15வது நிதிக்குழு ஆணைய மானியத்தின் முதலாவது தவணையையும், மிசோரம் மாநிலத்தின் உள்ளாட்சி அமைப்புகளுக்கு இரண்டாவது தவணையையும் வழங்கியுள்ளது.
- போர் மற்றும் கடும் ஆயுத மோதலில் சுற்றுச்சூழல் வளங்கள் சுரண்டப்படுவதைத் தடுப்பதற்கான சர்வதேச தினம் ஆனது ஆண்டுதோறும் நவம்பர் 06 ஆம் தேதியன்று அனுசரிக்கப்படுகிறது.

# தமிழ்நாடு செய்திகள்


## கோவையில் ஆறு புதிய திட்டங்கள்

- தமிழக முதல்வர் தனது கோயம்புத்தூர் பயணத்தின் போது ஆறு புதியத் திட்டங்களை வெளியிட்டுள்ளார்.
- இதில் ஒருங்கிணைந்த நகை உற்பத்திப் பூங்கா, புதிய TIDEL பூங்கா, சின்னியம்பாளையத்தில் இருந்து நீலம்பூர் வரையிலான 5 கிலோ மீட்டர் நீள அவிநாசி சாலை மேம்பாலத்தை விரிவுபடுத்தச் செய்தல் மற்றும் கோயம்புத்தூர் மாநகரின் சேதமடைந்த சாலைகளை 200 கோடி ரூபாய் செலவில் சீரமைக்கும் பணிகள் ஆகியன அடங்கும்.
- தொண்டாமுத்தூர் பகுதியில் மனித விலங்கு மோதல்களைத் தடுப்பதற்காக என்று 10 கிலோமீட்டருக்கு நவீன யானை நடமாட்டத் தடுப்பு வேலிகள் அமைக்கப்படும் என்று அறிவித்துள்ளார்.
- கோயம்புத்தூர் அனுப்பர்பாளையத்தில் அமைக்கப்பட உள்ள பெரியார் நூலகம்

மற்றும் அறிவியல் மையத்திற்கும் அவர் அடிக்கல் நாட்டினார்.




## தமிழகத்தின் சொந்த வரி வருவாய் 2024-25




- 2024-25 ஆம் நிதியாண்டின் முதல் பாதியில் தமிழகத்தின் சொந்த வரி வருவாய் ஆனது சுமார் 14% அதிகரித்து 86,975.28 கோடி ரூபாயாக இருந்தது.
- 2023-24 ஆம் நிதியாண்டின் முதல் பாதியில் இது 76,257.13 கோடி ரூபாயாக இருந்தது.
- தமிழகத்தின் மொத்த வருவாய் வரவுகளில் மாநிலத்தின் சொந்த வரி வருவாய் (SOTR) ஆனது 75.6% ஆகும்.
- 2024-25 ஆம் நிதியாண்டின் முதல் பாதியில் மாநிலச் சரக்கு மற்றும் சேவை வரி (SGST) வசூல் ஆனது 20.12% அதிகரித்து 35,414.05 கோடி ரூபாயாக இருந்தது.
- இது கடந்த ஆண்டு இதே காலக் கட்டத்தில் 29,481.97 கோடி ரூபாயாக இருந்தது.
- 24.4% வருவாய் வரவுகள் ஆனது, மத்திய வரிகள் மற்றும் மத்திய அரசின் மானியங்கள் ஆகியவற்றில் இருந்து பெறப்படுகிறது.
- வருவாய்ப் பற்றாக்குறையானது, 2024-25 ஆம் ஆண்டு முதல் பாதியில் 28,717.51 கோடி ரூபாயாக இருந்தது.
- இதுவரையில் 2024-25 ஆம் ஆண்டில் (ஆகஸ்ட் மாதம் வரை) 41,000 கோடி ரூபாயுடன்

மொத்தச் சந்தைக் கடன்களுடன் தமிழ்நாடு முதலிடத்தில் இருந்தது.

- தமிழகத்தைத் தொடர்ந்து ஆந்திரப் பிரதேசம் மற்றும் மகாராஷ்டிரா ஆகியவை தலா 40,000 கோடி ரூபாய் மொத்தக் கடன்களைப் பெற்றுள்ளன.

# தேசியச் செய்திகள்

## ஷில்ப் சமகம் மேளா

- மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் ஆனது 'ஷில்ப் சமகம் மேளா 2024' என்ற நிகழ்ச்சியினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது இந்தியாவின் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த முக்கியமானப் பாரம்பரிய கை வினைப் பொருட்களை காட்சிப்படுத்துவதையும் மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த நிகழ்ச்சியின் போது 'TULIP' திட்டம் தொடங்கப்பட்டது.
- 'TULIP' என்பது பாரம்பரியக் கைவினைஞர்களின் வாழ்வாதாரத்திற்கான முன்னேற்றத் திட்டத்தைக் குறிக்கிறது.
- இந்த முன்னெடுப்பானது, விளிம்புநிலையில் உள்ள கைவினைஞர்களை மேம்படுத்தச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது அவர்களின் தயாரிப்புகளை உலகளவில் வெளிப்படச் செய்தல் மற்றும் அவற்றின் விற்பனைக்கான இயங்கலைத் தளத்தினை அவர்களுக்கு வழங்குகிறது.




## சொத்து உரிமையாளர்கள் சங்க வழக்கு - 1992

- இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 39(b) என்ற பிரிவின் கீழ் அனைத்து வகையிலான தனியார் சொத்துக்களையும் அரசு கையகப்படுத்த முடியாது என்று உச்ச நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.
- சரத்து 39(b) ஆனது, பொது மக்களுக்கான ஒரு சிறந்த சேவையினை வழங்குவதற்காக "சமூகத்தின் வளங்கள்" பகிர்ந்தளிக்கப் படுவதை உறுதி செய்வதற்கான பல்வேறு

கொள்கைகளை அரசாங்கம் வழிநடத்த வேண்டும் என்று குறிப்பிடுகிறது.

- இருப்பினும், இந்த இலக்குடன் மாநிலங்கள் பெருமளவில் ஒருங்கி இருந்தால், குறிப்பிட்ட வழக்குகளில் சில தனிப்பட்டச் சொத்துக்களை உரிமை கோரலாம் என்று நீதிமன்றம் கூறியுள்ளது.
- 39(b) சரத்துப் பிரிவினை நடைமுறைப் படுத்துவதற்காக இயற்றப்பட்டச் சட்டங்களை பாதுகாக்கும் "சட்டப் பாதுகாப்பாக" சரத்து 31C உள்ளது.
- 1971 ஆம் ஆண்டு அரசியலமைப்பு (இருபத்தி ஐந்தாவது) திருத்தத்தின் மூலம் பொது உடைமைப் பொருளாதாரக் கொள்கையை பாதுகாப்பதற்கு வேண்டி சரத்து 31C ஆனது சேர்க்கப்பட்டது.
- நீதிபதி கிருஷ்ண ஐயர் தலைமையிலான 1978 ஆம் ஆண்டு வழக்கில் அளிக்கப்பட்டத் தீர்ப்பின் படி, எந்தவொரு தனி நபர்களின் சொத்துக்களும் சமூகச் சொத்துகளாகக் குறிப்பிடப் படலாம்.

**CLARITY ON RESOURCES**

- Ruling provided clarity on the interpretation of Articles 31C and 39(b) of the Constitution, pivotal provisions concerning the rights of individuals against the state's authority to control resources for public good




- Verdict has significant implications for laws impacting property and resource distribution, particularly in Maharashtra, where ageing buildings pose severe safety hazards and their restoration was a major issue
- *Majority judgment did not agree with the view expressed by Justice Krishna Iyer in the case of Ranganatha Reddy of 1978 wherein it was held that private properties could be regarded as community resources

## உத்தரப் பிரதேச மதராஸா கல்வி சட்டம்

- உச்ச நீதிமன்றம் ஆனது, 2004 ஆம் ஆண்டு உத்தரப் பிரதேச மதராஸா கல்விச் சட்டத்தின் (மதராஸா சட்டம்) அரசியலமைப்புச் செல்லுபடித் தன்மையினை உறுதி செய்தது.
- ஆனால் பல்கலைக்கழக மானியக் குழு சட்டத்தினை மீறுவதால் மதராஸாக்கள் உயர் கல்விப் பட்டங்களை வழங்க முடியாது என்றும் உச்ச நீதிமன்றம் அறிவித்துள்ளது.
- இந்த வழக்கு ஆனது அஞ்சும் காத்ரி & மற்றவர்கள் Vs இந்திய ஒன்றியம் இடையிலான வழக்கு என்று அழைக்கப்படுகிறது.
- மார்ச் 22 ஆம் தேதியன்று, அலகாபாத் உயர் நீதிமன்றம் ஆனது இந்தச் சட்டத்தினை "அரசியலமைப்புக்கு எதிரானது" என்றும், மதச்சார்பின்மைக் கொள்கையை மீறச் செய்வதாகவும் அறிவித்தது.
- மதராஸாக்கள் இஸ்லாமியக் கோட்பாடுகள் மற்றும் நடைமுறைகள் மற்றும் முக்கிய மதச்சார்பற்றக் கல்வி ஆகிய இரண்டிலும் சமயக் கல்வியை வழங்குகின்றன.
- உத்தரப் பிரதேசத்தில் உள்ள இந்த நிறுவனங்களுக்கு மதராஸா சட்டம் ஆனது ஒரு


சட்டக் கட்டமைப்பை வழங்குகிறது.

- இது உத்தரப் பிரதேச மதராஸா கல்வி வாரியத்தினை (வாரியம்) நிறுவியுள்ளது என்ற நிலையில் இந்த வாரியமானது அதற்கானப் பாடத் திட்டங்களையும் நன்கு தயாரித்து தீர்மானித்து, அனைத்து படிப்புகளுக்கும் தேர்வுகளை நடத்துகிறது.
- இந்தச் சட்டம் மதராஸா கல்வியை ஒழுங்குபடுத்துவதற்கான விதிகளை உருவாக்கும் அதிகாரத்தையும் மாநில அரசுக்கு வழங்குகிறது.




# சர்வதேசச் செய்திகள்


## அமெரிக்காவின் 47வது அதிபர்



- அமெரிக்கத் துணை அதிபர் கமலா ஹாரிஸை வீழ்த்தி அமெரிக்காவின் 47வது அதிபராக டொனால்ட் J. டிரம்ப் பதவியேற்றார்.
- 1884 மற்றும் 1892 ஆம் ஆண்டுகளில் அதிபரான க்ரோவர் க்ளீவ்லேண்டிற்குப் பிறகு, வெள்ளை மாளிகையில் ஒரு அதிபர் தொடர்ச்சியாக இல்லாமல் இரண்டு முறை பதவி வகிப்பது இது இரண்டாவது முறையாகும்.
- அமெரிக்கா நாடானது வாக்காளர் குழு என்ற ஒரு முறையைப் பின்பற்றுகிறது.
- மக்கள் தொகையின் அடிப்படையில், இந்த வாக்காளர் குழுவானது மாகாணங்களுக்கு தனது வாக்குகளை ஒதுக்குகின்றன.

- மொத்தம் 538 தேர்தல் வாக்காளர் குழு வாக்குகள் உள்ளன; 435 பிரதிநிதிகள் சபை, 100 பேரவை இடங்கள் மற்றும் வாஷிங்டன் DC மாகாணத்தில் 3 இடங்கள்.
- முதலாவதாக, அரசியல் கட்சிகள் தேர்தலுக்கு முன் மாகாணங்களில் சாத்தியமான வாக்காளர்களைத் தேர்ந்தெடுக்கின்றன.
- பின்னர், ஒவ்வொரு மாகாணத்திலும் உள்ள பொதுமக்கள் பொதுத் தேர்தலின் போது வாக்களிப்பதன் மூலம் தங்கள் வாக்காளர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள்.
- எனவே, பொதுமக்கள் உண்மையில் ஒரு வாக்காளர்களை தேர்ந்தெடுக்கிறார்களே தவிர, பொதுத் தேர்தலில் வாக்களிக்கும் போது நேரடியாக அதிபரைத் தேர்ந்தேடுக்க வில்லை.
- அதிபர் தேர்தலில் வெற்றிபெற ஒரு வேட்பாளருக்கு குறைந்தது 270 வாக்காளர்களின் வாக்குகள் தேவை.
- அமெரிக்க அரசியலமைப்பின் படி, ஒரு வேட்பாளர், அதிபர் பதவிக்கு போட்டியிட தகுதி பெறுவதற்கு, நாட்டில் இயற்கையாகப் பிறந்த குடிமகனாகவும், 35 வயது அல்லது அதற்கு மேற்பட்டவராகவும், 14 ஆண்டுகள் அமெரிக்காவில் வசிப்பவராகவும் இருக்க வேண்டும்.
- J.D.வான்ஸ் அமெரிக்காவின் துணை அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- புதிய அதிபரின் பதவிக்காலம் ஜனவரி 20 ஆம் தேதி தொடங்குகிறது என்ற நிலையில் இந்த தேதியானது பதவியேற்பு நாளுமாகும்.

## உலகச் சுகாதார அவசரநிலைச் செயல் பிரிவு





- சமீபத்தியக் குரங்கம்மை நோய்த் தொற்றிற்கு எதிரான நடவடிக்கைகளை மேற் கொள்ளும் விதமாக உலகச் சுகாதார அமைப்பானது முதல்முறையாக இந்த உலகச் சுகாதார அவசரநிலை செயல் பிரிவை (GHEC) நிறுவியுள்ளது.
- இந்த ஆண்டு ஆப்பிரிக்காவில் ஏற்கனவே 15,600 குரங்கம்மை பாதிப்புகள் மற்றும் 537 இறப்புகள் பதிவாகியுள்ளன.
- 2022 ஆம் ஆண்டில், உலகச் சுகாதார அமைப்பானது குரங்கம்மையினைச் சர்வதேச அளவில் கவலை கொள்ள வைக்கக் கூடிய பொதுச் சுகாதார அவசரநிலை (PHEIC) என வகைப்படுத்தியுள்ளது.

- கோவிட்-19 பெருந் தொற்றின் போது அடையாளம் காணப்பட்ட சில இடைவெளிகளை நிவர்த்தி செய்வதற்காக உலக சுகாதார அமைப்பினால் 2023 ஆம் ஆண்டில் GHEC நிறுவப்பட்டது.
- அதன் முக்கிய உத்திகள் என்பது பாதிப்புகளைக் கண்டறிதல், பாதிப்புத் தொடர்பின் தடமறிதல், பாதிப்பினைத் தடுப்பதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்ட தடுப்பூசி, மருத்துவ மற்றும் வீட்டுப் பராமரிப்பு, தொற்றுத் தடுப்பு, சமூக ஈடுபாடு மற்றும் தளவாட ஆதரவு ஆகியவை ஆகும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

## IL 35 புரதம்

- கணைய செல் ஊடுருவலைக் குறைக்கின்ற அழற்சி உண்டாக்கும் இரசாயனங்களை உருவாக்கும் குறிப்பிட்ட நோயெதிர்ப்பு செல்களைக் குறைப்பதன் மூலம் நோய் எதிர்ப்பு மண்டலத்தைப் பாதுகாக்கும் IL-35 என்ற ஒரு குறிப்பிட்ட வகை புரதத்தினை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
- இது முதல் வகை நீரிழிவு நோய் மற்றும் தன்னுடல் தாக்க நீரிழிவு நோய் ஆகியன ஏற்படுவதற்கான முக்கியப் பங்களிப்பாகும்.
- இந்தப் புரதம் ஆனது ஒரு புதிய நீரிழிவு சிகிச்சை விருப்பத் தேர்வினை அளிக்கிறது.
- IL-35 என்பது IL-12α மற்றும் IL-27β சங்கிலிகளின் ஒரு குறிப்பிட்ட புரதமாகும் என்பதோடு இது IL12A மற்றும் EBI3 மரபணுக்கள் கொண்டு குறியிடப் படுகிறது.




# மாநிலச் செய்திகள்

## GDP மற்றும் கடன் விகிதம் 2024-25

- இந்தியாவின் கடன் சுமை மற்றும் நாட்டின் ஒட்டு மொத்த பொருளாதார நல்வாழ்வை நிர்வகிக்கும் இந்தியாவின் திறனை மதிப்பிடுவதில் இந்தியாவின் கடன்- GDP விகிதம் ஓர் அடிப்படை பொருளாதார அளவீடு ஆகும்.
- இது நிதிசார் பாதிப்பு மற்றும் பெருமளவில் குறைக்கப்பட்ட நிதி நெகிழ்வுத் தன்மை ஆகியவற்றைக் குறிக்கிறது.
- பஞ்சாப் மாநிலம் ஆனது 2024-25 ஆம் நிதியாண்டில் 44.1 விகிதத்துடன் அதிக கடன் - GDP விகிதத்தைக் கொண்டுள்ளது.
- அதைத் தொடர்ந்து இமாச்சலப் பிரதேசம் (42.5) மற்றும் அருணாச்சலப் பிரதேசம் (40.8)

ஆகியவை உள்ளன.

❖ 26.4% கடன்- GDP விகிதத்துடன் தமிழ்நாடு 19வது இடத்தில் உள்ளது.

| State | Debt-to-GDP (%) in FY 2024-25 (Budget Estimate) | Fiscal Deficit(%) in FY 2024-25 (Budget Estimate) |
|---|---|---|
| Punjab | 44.1 | 3.8 |
| Himachal Pradesh | 42.5 | 4.7 |
| Arunachal Pradesh | 40.8 | 6.3 |
| Nagaland | 38.6 | 3 |
| Meghalaya | 37.9 | 3.8 |
| West Bengal | 36.9 | 3.6 |

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## இந்தியாவின் அதிகாரக் குழு

❖ இந்தியா டுடே இதழின் 2024 ஆம் ஆண்டிற்கான அரசியல் அதிகாரப் பட்டியலில் இடம் பெற்றுள்ள முதல் 3 நபர்கள் இந்தியப் பிரதமர், மோகன் பகவத் மற்றும் மத்திய உள் துறை அமைச்சர் ஆகியோர் ஆவர்.

❖ இதில் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் இராகுல் காந்தி 4வது இடத்தில் உள்ளார்.

❖ முதல்வர்களில் சந்திரபாபு நாயுடு மற்றும் நிதிஷ்குமார் ஆகியோர் முறையே 5 மற்றும் 6வது இடத்தில் உள்ளனர்.

❖ உத்தரப் பிரதேசம், தமிழ்நாடு மற்றும் மேற்கு வங்க முதல்வர் முறையே 7, 8 மற்றும் 9வது இடங்களைப் பெற்றுள்ளனர்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★